**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 78/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | ராஜா |
| Father's Name/Husband Name: | வைஷ்ராய் |
| Village : | சு.ஆடுதுரை |
| Taluk : | குன்னம் |
| Age : | 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.05.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எலக்டீரிசனாக வேலை செய்து வருகிறேன். நான் எதிரி கௌரி என்பவரின் மகளை காதல் திருமணம் செய்துள்ளேன். எனக்கும் என்னுடைய மனைவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறோம். கடந்த 13.03.2023ம் தேதி காலை 10.30 மணியளவில் வேலைக்கு செல்வதற்காக திருமாந்துறை மாரியம்மன் கோவில் அருகே வந்தபோது கௌரி மற்றும் அவரின் மகள் கிஷோர் இருவரும் வந்து என்னை தேவிடியா பையன், குச்சிக்காரி பையன் என்று என்னை கெட்ட வார்த்தையால் கௌரி என்னை திட்டினார்.

எதற்காக என்னை கெட்ட வார்த்தையால் திட்டுகிறீர்கள் என்று எதிரிகளிடம் கேட்ட போது எதிரி கௌரி என்னுடைய மகளுக்கு விவகாரத்து கொடுக்க வேண்டும் இல்லையென்றால் என்மீது வழக்கு தொடுப்பேன் என்று சொல்லி அவர் காலில்

அணிந்திருந்த செருப்பை கழட்டி என்னை அடித்தார். மறுபடியும் கௌரி என்னை செருப்பால் அடிக்க வந்தபோது நான் அவரின் கையை பிடித்து கொண்டேன். எதிரி கிஷோர் எனக்கு பின்புறமாக வந்து என்னை பிடித்து கொண்டார்.

கௌரி நான் கழுத்தில் அணிந்திருந்த செயினை பிடித்து இழுத்தார். செயின் அறுந்து விட்டது. அதில் எனக்கு கழுத்தின் கீழ் பகுதியில் நெஞ்சு அருகே காயம் ஏற்பட்டது. அதன்பிறகு என் நண்பர்கள் வந்து சண்டையை தடுத்தார்கள். அதன்பிறகு காவல் நிலையத்திற்கு சென்று நான் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அந்த **புகார் அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் புகார் அளித்ததை தெரிந்து கொண்டு எதிரிகள் மருத்துவமனையில் சேர்ந்து கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் ITI Veldor படித்துள்ளேன். எந்த ஆண்டில் படித்தேன் என்றால் 2009–2010. நான் தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் புகாராக எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் ஆமாம். அந்த புகார் நான் கைபட எழுதியது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு எந்த அதிகாரியிடம் நான் புகார் கொடுத்தேன் என்றால் 13.03.2023ம் தேதி மாலை 6 மணிக்கு மேல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் இருந்து மருத்துவமனைக்கு செல்ல மங்களமேடு காவல் நிலையத்தை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு முதலில் சென்று புகார் கொடுத்து, மருத்துவ நமுநா வாங்கியபிறகு மருத்துவ சிகிச்சைக்கு சென்றேனா என்றால் இல்லை. நான் எனது வழக்கறிஞரின் ஆலோசணையின் பேரில் மருத்துவமனைக்கு சென்ற பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான், எனது வழக்கறஞிர் முதலில் மருத்துவமனைக்கு சென்று சிசிக்சை பெற்று அதன் பிறகு புகார் கொடுக்கவும் என்று கூறினார். பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றால் 13.03.2023ம் தேதி காலை 11.30 மணிக்கு சென்றேன். என்னுடன் மருத்துவமனைக்கு யார் வந்தார்கள் என்றால் எனது நண்பர் செம்மலை வந்தார். மருத்துவமனையில் நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேனா என்றால்

இல்லை. என்னை பரிசோதித்த மருத்துவரிடம் வழக்கு பற்றிய விவரங்களை நான் தான் கூறினேன் என்றால் சரிதான். சிகிச்சைக்கு பின் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் சம்பத்தன்றே மாலை 6 மணிக்கு புகார் கொடுத்தேன். எனது புகாரில் சாட்சியங்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் மாரியம்மன் கோவில் அருகே நடந்ததாக எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தை விலக்கி விட்டது யார் என்றால் எனது நண்பர்களாகிய செம்மலை மற்றும் கொளஞ்சி. நண்பர்கள் இருவரின் தந்தையார் பெயர் தெரியாது. இந்த செம்மலை என்பவர் தான் என்னுடன் மருத்துவமனைக்கு வந்தாரா என்றால் ஆமால். இவர்கள் இருவரும் என்ன தொழில் செய்கிறார்கள் என்றால் அவர்களும் எலக்டீரிசியன் வேலை தான் செய்கிறார்கள்.

புகாரை எந்த நிற மையில் எழுதினேன் என்றால் கருப்பு நிற மையில் எழுதினேன். புகாரை நான் எங்கு வைத்து எழுதினேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதினேன். அந்த புகார் வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பே இரண்டாவது எதிரி என்மீதும் மேற்படி உள்ள எனது இரு நண்பர்கள் மீதும் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் C.C.9/2024 ஆக விசாரணையில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 ஆன நான் கொடுத்த புகாரில் எனது முதல் விசாரணையில் 2ம் எதிரி கௌரி ஆபாசமாக பேசினார் என்று கூறிய வார்த்தைகள் இல்லை என்றால் சரிதான். மேலும் அ.சா.ஆ.1ல் 2ம் எதிரி வலது கையால் செருப்பால் அடித்தார் என்றும், இடது கையால் செயிளை பறித்தார் என்றும் நான் எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். மேலும் அ.சா.ஆ.1ல் 1ம் எதிரி கிஷோர் என்னை பின்புறமாக பிடித்துக் கொண்டார் என்ற விவரம் இல்லை என்றால் சரியல்ல.

2ம் எதிரி கௌரியின் மகளை நான் காதலித்து திருமணம் செய்து கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் அவரை சட்டத்திற்கு விரோதமாக கட்டாயப்படுத்தி திருமணம் செய்து கொண்டதாக அதனை ரத்து செய்ய எனது மனைவி விவகாரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் நட்புக் கலந்த பல நபர்களை வைத்து கொண்டு சட்டத்திற்கு புறம்பான பல வேலைகளை நான் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி என்னுடன் எந்த உறவும் வைக்காமல் அவரது பெற்றோர் வீட்டில் இருப்பதால் தான் நான் எனது

நண்பர்களுடன் எதிரிகளை வலிமறித்து அடித்து அராஜகம் செய்து கொலை மிரட்டல் விடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு எதிராக கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக தான் நானும் எனது நண்பர்களும் வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்து எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.